**செய்தி வெளியீடு எண்:483** **நாள் : 24.09.2014**

## <u>மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் திரு. முக்கூர் என். சுப்பிரமணியன் அவர்கள் கிண்டி மற்றும் வேளச்சேரி நகர்புற அரசு பொது இ–சேவை மையங்களை 24.09.2014 அன்று திறந்து வைத்தார்</u>

## <u>செய்தி வெளியீடு</u>

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நகர்ப்புறங்களில் சொத்து வரி, மின்கட்டணம் உள்ளிட்ட பல்வேறு வரிகளையும் மற்றும் கட்டணங்களையும் பொது மக்கள் ஒரே இடத்தில் செலுத்திட ஏதுவாக, சென்னை மாநகரத்தில் முன்னோடித் திட்டமாக முதற்கட்டமாக 14 இடங்களில் நகர்ப்புற அரசு பொது இ–சேவை மையங்களை 24.02.2014 அன்று துவக்கி வைத்தார்.

தற்போது, சென்னை மாவட்ட நிர்வாகத்திலுள்ள 7 வட்டாட்சியர் அலுவலகங்கள் (1. Egmore Taluk, Spur Tank Road (Near T.B Hospital, Chetput, 2. Mambalam Taluk, Bharathidasan Salai, 3. Mylapore Taluk, Greenways Road, 4. Purasawalkam Taluk, Raja Muthaiah Salai, 5. Perambur Taluk, Perambur High Road, Near Perambur Railway Station, 6. Tondiarpet Taluk, Corporation Community Centre, DoorNo. 473, Thiruvoittyur High Road, Near to Appolo Hospital, 7. Aminjikarai Taluk, No. 4, West Mada Street, Koyambedu, சென்னை மாநகராட்சியின் 3 மண்டல அலுவலகங்கள் (1. Zone V-Royapuram, 2. Zone VIII-Anna Nagar, 3. Zone XIII-Adyar), சென்னை குடிநீர் வாரியத்தின் 2 அலுவலகங்கள் (1. Metro Water Area XIII, Depo No. 171, Anna

Salai, Saidapet, 2. Metro Water Area X, Depo No. 132, 12-B, Ist Avenue, Ashok Nagar),

5 தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கங்கள் (Primary Agriculture Co-operative Credit Societies) மற்றும் 1 நகர்புற கூட்டுறவு கடன் சங்கம் (Urban Co-operative Credit Society Offices) ஆகிய 18 இடங்களில் நகர்ப்புற அரசு பொது இ–சேவை மையங்கள் இயங்கி வருகின்றது.

இம்மையங்களை தமிழ் நாடு மின்னணு நிறுவனம் (Electronics Corporation of Tamil Nadu Limited) மற்றும் தமிழ் நாடு மின் ஆளுமை முகமை (Tamil Nadu e-Governance Agency) மூலம் நிர்வகிக்கப்படுகிறது.

**<u>இம்மையங்களில் வழங்கப்பட்டுவரும் சேவைகளின் விபரம்</u>**

**<u>வருவாயத்துறையின் சேவைகள்</u>**

- வருமான சான்றிதழ்
- சாதிச் சான்றிதழ்
- இருப்பிடச் சான்றிதழ்
- குடும்பத்தில் முதல் பட்டதாரி இல்லை என்பதற்கான சான்றிதழ்
- கணவனால் கைவிடப்பட்டோருக்கான சான்றிதழ்

**<u>சமூக நலத் துறையின் சேவைகள்</u>**

- முதலமைச்சரின் பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம்
- டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி நினைவு கலப்பு திருமண உதவித் திட்டம்
- ஈ.வே.ரா. மணியம்மையார் நினைவு ஏழை விதவையர் மகள் திருமண உதவித் திட்டம்

- டாக்டர் தர்மாம்பாள் அம்மையார் நினைவு விதவை மறுமண உதவித் திட்டம்
- அன்னை தெரேசா நினைவு ஆதரவற்ற பெண்கள் திருமண உதவித் திட்டம்

<u>**சென்னை மாநகராட்சியின் சேவைகள்**</u>

- பிறப்புச் சான்றிதழ்
- இறப்புச் சான்றிதழ்
- மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித் திட்டம்
- சென்னை மாநகராட்சியின் சொத்துவரி கட்டணம்

மற்றும் **மின்கட்டணம்** செலுத்துதல்

இந்த மையங்கள் பொது மக்கள் பல்வேறு அரசு அலுவலகங்களுக்குச் செல்லும் சிரமம் கணிசமாக குறைக்கும் வகையிலும் ஒரே இடத்தில் அனைத்துத் துறை சார்ந்த சேவைகளை பெறும் வகையிலும் அமைக்கப்பட்டுள்ளன. வருங்காலத்தில் இம்மையங்கள் மூலம் பல்வேறு அரசுத் துறைகளின் சேவைகளை இணையம் மூலமாகவே பொதுமக்கள் பெற்றிட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தற்போது மக்களின் அமோக வரவேற்புடன் இம்மையங்கள் இயங்கி வருவதால், மேலும் இத்திட்டத்தை விரிவுப்படுத்த 300 மையங்கள் சென்னையிலும், இதர மாநகராட்சி பகுதிகளிலும் அமைக்க ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டுள்ளது.

அரசு பொது இ–சேவை மையங்கள் மூலம் **24.2.2014** முதல் **23.9.2014** வரை வழங்கப்பட்ட சான்றுகளின் விவரங்கள் பின் வருமாறு:

| | | |
|---|---|---|
| சாதிச் சான்று | : | 19,356 |
| வருமானச் சான்று | : | 24,063 |
| பிறப்பிடச் சான்று | : | 1,965 |
| முதல் பட்டதாரி சான்று | : | 3,729 |
| | | ------------- |
| | | 49,113 |
| | | ------------- |

மின் கட்டணம்

| | | |
|---|---|---|
| மின் கட்டணம் செலுத்தியவர்கள் | : | 695 |
| வசூலிக்கப்பட்ட தொகை | : | ரூ. **14,11,234/-** |

தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் மாண்புமிகு முக்கூர் என்.சுப்பிரமணியன் அவர்கள் **24.09.2014** அன்று எண். **370,** மாநகராட்சி மண்டல அலுவலகம், ரிச்சேட்ஸ் பூங்காவில் அமைந்துள்ள கிண்டி வட்டாட்சியர் அலுவலகத்தில் உள்ள நகர்புற அரசு பொது இ–சேவை மையம் மற்றும் எண். **113,** வி.வி. கோயில் தெரு, தரமணி **100** அடி சாலையில் அமைந்துள்ள வேளச்சேரி வட்டாட்சியர் அலுவலகத்தில் உள்ள நகர்புற அரசு பொது இ–சேவை மையங்களை திறந்து வைத்து பயனாளிகளுக்கு சான்றிதழ்கள் வழங்கினார்.

அவருடன் மாண்புமிகு சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை அமைச்சர் திருமதி.பா.வளர்மதி, தகவல் தொழில்நுட்பவியல் துறை செயலாளர் திரு டி.கே. இராமசந்திரன், இ.ஆ.ப.,, எல்காட் மேலாண்மை இயக்குநர் திரு.அதுல் ஆனந்த், இ.ஆ.ப., சென்னை மாவட்ட ஆட்சியர் திருமதி இ. சுந்தரவள்ளி, இ.ஆ.ப, தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர்.ஜெ.ஜெயவர்த்தன், தமிழ்நாடு ஜவுளி கழக தலைவர் திரு. விருகை.V.N.ரவி, சைதாப்பேட்டை சட்டமன்ற உறுப்பினர் திரு.G.செந்தமிழன் மற்றும் வேளச்சேரி சட்டமன்ற உறுப்பினர் திரு.M.K.அசோக் ஆகியோர் உடனிருந்தனர்.

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**